gistered as a News
paper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலே மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு கார்த்திகைமீ எஉ (1946 நவம்பர் 22 வெள்ளிக்கிழமை) [இல. கூச

## சிவ தரிசனம்

[ இறைமணி ]

தன்மீது உள்ளங் கனிந்த பக்தர்களுக்குத் தரிசனங் கொடுத்தற்காக இறைவன் பல்வேறு வடிவங்களிற் காட்சி கொடுக்கிறன். தன் பக்திக் கண் ஞானக்கண்களால் பல உருவங்களே அவனுக்குக்கொடுக்கிறன் பக்தன். அத்தகையதோர் தெய்வமாகவே 'சிவன்' என்னும் தெய்வ வடிவம் சிருஷ்டிக்கப்பட்டுப் பக்தனுக்குத் தோன்றுகிறது.

சிவபிரான் ஒரு தெய்வம். எனவே, அவனிடத்தின் மானி— அம் சத்துக்கப்பாற்பட்ட சில சத்திகளேயும் தோற்றங்களேயும் புகுத்துகிறன் பக்தன். யாவர்க்கும் விழியிரண்டு. தெய்வ வடிவமாகிய சிவனுக்கோ மூன்று விழிகளென்று காண்கிறன் பக்தன். அன்றியும் சூரியன், சந்திரன், அக்கினி யென்றும் முச்சுடருமே முக்கண்களா மென்று குறிக்கிறன். தன் அன்பர்கட்கு அருள்புரிதற்காகச் சிவன் கருணைபூத்து இளநகையுடன் விளக்குகிறன். அப்போது அவன் பற்கள் சிறிது வெளியில் தோன்றவும் சிறிது உடனே மறைபடவும் முகிழ்கின்றது. இரக்கங் காரணமாக மூன்று கண்களும் குளிர்ந்து நிலவையே வீசுகின்றன. அவனது முகம் வட்டவடிவமானது. செஞ்சடை புறங்கிடந்து தயங்குகின்றது.

சிவனென்னும் தெய்வ தத்துவத்துக்கு சத்தியாக (பெண் தத்துவமாக விளங்குவது உமை. சத்தியுஞ் சிவமும் ஒன்றுகூடியே உலகை நடத்துகின்றன ரென்பது தெய்வ மறைகளாலும் சித்தாந்தங்களாலும் நிரூபிக்கப்பட்ட உண்மை. உலக மாதாவாகிய உமை கயற்கண்களே உடையவள்: அங்கயற்கண்ணி, மீனட்சி முதலிய பெயர்கள் இதுகாரணமாகவே அவளுக் குண்டாயின இப்பார்வதி நாயகியார் பச்சை மரகதத்தின லியன்ற ஓர் பசுங்கொடி யென்று கூறலாம். சிவனே செம்பவள நிறமுடையவன். இதனைச் செக்கர் மெய்வடிவமென்றும் கூறுதலமையும். இவ்வாறு தோன்றுகின்றது பரமனது மெய்வடிவம்,

சிவன் சத்தியாகிய உமையுடன் கூடியே தன் பக்தர்களுக்குத் தரிசனம் (காட்சி) கொடுப்பது வழக்கம். இதற்காகவே சத்தியைத் தன்னிடப் பாகத்தேகொண்டு விளங்குகிறன். ஒரு பாதி சிவமும் ஒருபாதி சத்தியுமாக உள்ள வடிவமே தெய்வத் திருக்கோலம். இதனலன்றே இவனே அர்த்தநாரீசன் என்று கூறுகின்றனர். தன் பக்தர்கள் தன்னை நினைந்துத் தவமியற்றும்போது இவ் வர்த்தநாரீசப் பெருந்தகை அவர்கட்குத் தன் காட்சி யீந்தருளுகின்றன். இச்செய்தி அடியவர் சரித்திர வாயிலாக நிலைநிறுத்தப்பட்ட உண்மை இதனலன்றே "அன்பருள்ளுடுருகிக்குழிக்மலன்றே" என்று பக்தர்கள் கூறிப் போந்தார். அன்பே சிவம். உண்மை யன்பர் பக்தி வலையிற் சிக்குதலாலன்றே இறைவனை "கருணையே வடிவமாகிய" என்றும் 'இன்பமே என்னுடைய அன்பே'' என்றும், 'அன்பே சிவமாவது'' என்றும் ஆன்றேர் பாடி மகிழ்ந்தனர்.

இக்குணங்கள் நிறைந்த அன்புச் சுடரை — அர்த்த நாரீச மூர்த்தியை நோக்கிக் கைலேயங்கிரிச் சாரலிலே கடுந்தவம் புரிகிறன் காண்டீபன். பார்த்தனது தவத்துக்குருகிப் பைந்தொடியாக வந்து தோன்றுகிறன். எவ்வாறு? முதலிலே வேட்டுவக் கோலத்தில்; இறுதியில் தன் சுயரூபத்தில்; பக்தர் யாவரும் கண்டு களித்த அத்தெய்வ ரூபததிற்ருன் அருச்சுனன் அத்தெய்வ வடிவைத் தரிசிக்கிறன் பல சொல்லித் துதிக்கிறன், போற்றி வணங்குகிறன், இச்சமயத்தில் கிரீடியின் காட்சிக்குச் சிவபிரான் எவ்வாறு தோற்றுகிறன் என்பதைப் பாரத நூலாசிரியர் ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வார் தம் உள்ளக்கிழியின் உருவெழுதிக் காண்கின்ருர். அதே விதமாகத் தம் கவியமுதத்தால் வெளிப்படுத்துகிருர். அருச்சுனன் கண்ட சிவ வடிவத்தை அவன் வாழ்த்துவதாகக் கொண்டு கவிஞர் பெருமான்,

"முக்கணும் நிலவெழ
முகிழ்த்த மூரலுஞ்
சக்கர வதனமுந
தயங்கு வேணியும்
மைக்கயல் மரகத
வல்லி வாழ்வுறு
செக்கர் மெய்வடிமும்
சிறந்து வாழியே"

என்று சித்தரிக்கிருர். இப்பாசுரத்திலே அருச்சுனனலே தரிசிக்கப்பட்ட பொருள்களாக உம்மையுருபேற்ற சொற்கள் நான்கு காணப்படுகின்றன. அவை மூரலும், வேணியும், வதனமும், வடிவமும் என்பன இவை நான்கும் வாழியே என்ற வியங்கோள் வினை முற்றைப் பெற்றுத் தனித்து முடிந்து நிற்றலே உணர்க.

ஆரா அன்பினுல் நோக்கிய அருச்சுனனுக்கு முதலிலே அப்பெருமானுடைய கருணை நோக்கும் புன்முறுவலும் புலப்படுகின்றன. அதை யடுத்து அவன் காண்பது சக்கரவதனத்தையே. அதன் சார்பாகப் பற்குனன் செஞ்சடையைத் தரிசிக்கிறன் இதன்பின் அவனுக்குச் சத்தியின் வடிவந் தென்படுகிறது. ஈற்றில் சத்தியுஞ் சிவமும் ஒன்ருய்க் கூடிய அர்த்த நாரீச வடிவத்தைக் காணுகிறன்; கண்டு களிப்படைகிறன். அக்களிப்பினிடையே அவன் வாயினின்றும தன்னை யறியாமலே வாழியே! என்னும் வார்த்தை புறப்பட்டுவிடுகிறது. இவ் வுண்மைகளே யெல்லாமடக்கி ஈரிரண்டு வரிகளிற் புதைத்துவிடுகிருர் கவிஞர். இது வன்றே அருமை.

இவ்வருட் பாடலில் வில்லிபுத்தூரர் எழுதிக் காட்டிய சிவவடிவம்
"மைக் களமும் மான் மழுவும்
வரத முடன பயமுறு
மெய்க் கரமும் நாற்புயமும்
விளங்கு பணிக் கொடும் பூணும்
செக்கருறு மதிச் சடையும்
சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங் காண
முன்னின்றே யருள் புரிந்தான்"
என்று கந்தபுராணத்தல் கச்சியப்பர் எடுத்துக்காட்டிய வடிவத்தினை ஒத்து விளங்குதல் நோக்கி இன்புறுந் தகைத்து.

இவ்வளவு நுண்ணிதாகச் சிவதர்சனத்தை நமக்கு நான்கு வரிகளிற் புதைத்துவிட்டுச் சென்று புகழுடப் பெய்திய புலவர் பெருந்தகையாளரின் புகழை என்னென்று புகலமுடியும்.

## ஸ்மட்ஸ் ஆத்திரம்!

### உளறுபடைக்குத் தக்க பதில்

தென்மேற்கு ஆபிரிக்காவைத் தென் ஆபிரிக்காவுடன் இணைக்க ஸ்மட்ஸ் சேனதிபதி கொண்டிருந்த அவாவுக்கு இந்தியப் பிரதிநிதிகள், ஐக்கியதேச ஸ்தாபனத்தில் மண் போட்டுவிட்டது அவர்க்குப் போல்லாத ஆத்திரத்தை விளைத்துவிட்டது. அவர், இந்தியாவிலே வகுப்புக் கலவரங்கள் சதா இருக்கின்றனவென்றும், லட்சக்கணக்கான மக்களைத் தாழ்த்தப்பட்டவர் என்று கூறி சாதி ஹிந்துக்கள் ஒதுக்கி வைத்திருக்கிருர்கள் என்றும், அப்படிப்பட்ட இந்தியாவின் பிரதிநிதிகள் தென்மேற்கு ஆபிரிக்காவின் நீகிரோவர்க்காக உருகுவது தாதனம் என்றும் உளறினர்.

இவருடைய உளறுதலுக்கு இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராய சேர் மகாராஜ்சிங் தக்க பதில்கொடுத்தார். சுதந்திர வாசலில் நுழையும் நேரத்திலே எந்தநாட்டிலும் பயங்கரப் போராட்டங்கள் ஏற்படுவது வழக்கமென்றும், இப்போதுநிகழும் வகுப்புக் கலவரங்களே இந்திய அரசாங்கம் வெகுவாகக் கண்டிக்கிற தென்றும் கூறினர். மேலும் அவர் கூறியதாவது:-

இந்தியாவில் ஜாதி வேறுபாட்டு முறைகளிருப்பது உண்மைதான். ஆனல் ஒவ்வொரு ஜாதிக்கும் அதனதன் அரசியல் சட்ட பிரஜா உரிமைகள் அளிக்கப்பட்டே இருக்கின்றன. எங்கள் இந்தியக்கோஷ்டியைப் பாருங்கள், இதில் மூன்று வேறுபட்ட மதத்தவர்களும் ஏராளமான ஜாதியினரும் இருக்கிருர்கள். எனினும் எங்களெல்லோருக்கும் சம உரிமை இருக்கிறது. இந்தியாவில் எல்லா அரசாங்கங்களிலும் சம உரிமையளிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோரெனக் கூறப்படும் வர்க்கப் பிரதிநிதிகள் முக்கிய பங்குபற்றியிருக்கின்றனர். இதே நிலைமைதான் ஆப்பிரிக்கர்கள் இதர ஐரோப்பியர் முதலியோர் விஷயத்திலும் இருப்பதாக ஸ்மட்ஸ் கூறமுடியுமா? தென்னுப்பிரிக்கர்களுக்கு ஐரோப்பியர்களைப் போன்ற சம உரிமைகள் உண்டா? ஸ்மட்ஸின் தெ. ஆ. பிரதிநிதிக் கோஷ்டியில் ஏன் ஒரு ஆப்பிரிக்கர் கூடக் காணப்படவில்லை?

சேர் மகாராஜ்சிங் பேசுவதற்கு முன் பேசிய மெக்ஸிகோ பிரதிநிதி லூயி பாடில்பா நெர்வோ, தாம் தென்னுப்பிரிக்காவின் யோசனையை எதிர்த்துச் சம்மதம் செய்யப் போவதாக அறிவித்தார்,

டென்மார்க் பிரதிநிதி எச். லான்னக் கானடா பிரதிநிதி டபிள்யூ. ராபர்ட்ஸன், பிரஞ்சு பிரதிநிதியால் எமில் நக்கியா, ஸிரியாப் பிரதிநிதி தவ்பீக்ஹூஅனேதீ முதலியோரும் ஸ்மட்ஸை எதிர்த்தனர்,

## இந்தனேஷியக் குடியரசு

### ஒல்லாந்தர் அங்கீகரித்தனர்

இந்தனேஷியாவுக்கும், ஒல்லாந்த அரசாங்கத்தார்க்கு மிடையே ஓர் சமாதானஏற்பாடு ஒழுங்காகும் நிலைமையில் இருக்கிறது,

கடந்த மகாயுத்தத்தில், ஒல்லாந்தர்க்குக் கீழ் இருந்த இந்தனேஷிய நாடுகளை ஜப்பானியர் ஆக்கிரமித்து, அவர்கள் வெளியேறியபோது, சுயராச்சியத்தை நல்கிவிட்டுப் போயினர் அதனபின் டக்ரர் சுகர்ணுவைத் தலைவராகக் கொண்டுள்ள ஓர் சுதந்திர அரசாங்கம் அங்கு நடைபெற்றது. இதனை நசுக்கி மீண்டும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட ஒல்லாந்தர் பகீரதப் பிரயத்தனங்கள் செய்தனர். அவை எல்லாம் பிரதிகூலமடையவே, இற்றைக்குச் சின்னட்களுக்கு முன், ஒல்லாந்த அரசாங்கம, இந்தனேஷியத் தலைவர்களுடன் சமரசம் பேச ஓர் தூதுக் கோஷ்டியை அனுப்பியது,

இந்தனேஷியத் தலைவர்களும் குறித்த தூதுக்கோஷ்டியும் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தி ஈற்றில் சென்ற சனிக்கிழமை ஓர் முடிவுக்கு வந்தனர்.

இந்தனேஷியா குடியரசு அரசாங்கமாக விளங்குவதை இப்போது செய்துள்ள முடிவின்படி ஒல்லாந்த அரசாங்கம் அங்கீகரிக்கிறது.

இப்படிக் குடியரசாக இருந்த போதிலும், ஒல்லாந்துடன், இந்தனேஷியா நேசபான்மையை அடிப்படையாகக் கொண்ட ஓர் சமஷ்டி அரசியலிற் சேர்ந்துகொள்ளும்.

### சிவில் சேர்விஸ் உத்தியோகஸ்தர்

வருகிற பாராளுமன்றத் தெரிவுக்கான கருமங்களைச் செய்யவும் மேற்பார்வை செய்யவும் பல சிவில் சேர்விஸ் உத்தியோகஸ்தர்கள் தேவைப்படுவதால் இப்போது அவர்கள் தலைமையில் நடக்கும் பல அவசியகாலக் கச்சேரிகளை மூடி, அவர்களைத் தேர்தல் வேலைக்கு நியமிக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞூ
கார்த்திகை ௭௨ வெள்ளிக்கிழமை

## பயன்தரும் பனையைத் தறித்தலாகுமா?

சில தினங்களுக்கு முன்னர் இம்மாகாணத் தலைவராகிய திரு. சி. குமாரசுவாமியவர்கள் சாவகச்சேரியிலுள்ள "டிறிபேர்க்" ஆங்கில கலாசாலையில் ஒரு கூட்டத்திற் பேசியபோது, சென்ற இருபத்தைந்து வருடகாலத்துள் இந்த யாழ்ப்பாணநாட்டிலே ஒருகோடியே பதினொரு லட்சம் பனைமரங்கள் வரையில் தறிக்கப்பட்டனவெனக் கணக்கிட்டுக் கூறிக் கவலைப்பட்டார்; மாகாணத்தலைவர் இட்ட கணக்கு அதிகாரமுறையிற் கிடைத்தது போலும்; ஆனால், இன்னும் எத்தனை யாயிரம் பனைகள் இக்கணக்குள் அகப்படாது தறிக்கப்பட்டனவோ, மாகாணத் தலைவரும் அறியார், நாமும் அறியோம்; மலையும் நதியு மில்லா இந்த யாழ்ப்பாணக்குடா நாட்டிற்குப் பனைமரமானது ஆண்டவனால் அருளப்பட்ட கற்பகதருவெனச் சொன்னாலும் தகும்; யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கு இப்பனை 108 வகைப் பிரயோசனங்களைத் தருகின்றதென்று இங்குள்ள காலங்கண்ட மூதியோர் ஆராய்ந் தறிந்து வெளியிட்டுள்ளார்கள்; இந்த நூற்றெட்டுப் பயன்களோடு, இக்காலத்திலே இன்னும் பலபயன்களை இக்காலத்து மக்கள் ஆக்கி வருகின்றார்கள்; மலையில்லா நாட்டிற்கு முகிலை அப்பாற் செல்லவொட்டாது கவர்ந்து தடுத்து மழையைப் பெய்யச் செய்வதும் உந்தமான பனந்தோப்பென்றே விஞ்ஞானசாஸ்திரிகள் விளம்புகின்றார்கள்; பனம்பண்டம் இங்குள்ள மக்களுக்கும் மாடு ஆடுகளுக்கும் சிறந்த உணவுப் பொருள்களாய் உதவுகின்றன; இவைகளையெல்லாம் உத்தேசித்தே எங்கள் மூதாதையர், மூற்காலத்திலே இந்நாட்டில் வயல் தோட்டங்களுக்குப் பயன்படாத் திடர் நிலங்களிலும் மற்றை வெற்று நிலங்களிலும் பனையை உண்டு பண்ணி வைத்தார்கள்; அதன் பயன்களை அவர்களுடைய வழித்தோன்றல்கள் அநுபவித்து வந்தார்கள்.

ஆனாற் பிற்காலத்தில், உணவுக்காகிய பனம்பண்டங்களை உண்பது கௌரவக் குறைவாமென்ற விபரீதபுத்தியினால், இங்குள்ள நவநாகரீகத்தோடு கூடியமக்கள், வேற்று நாட்டுப் பண்டங்களை உண்ணத் தலைப்பட்டு, பனைகளை விருத்திபண்ணுவதையும் விடுத்து, உள்ள பனைமரங்களையும் மரத்தின் பொருட்டு வரைவின்றித் தறிக்கத் தலைப்பட்டார்கள்; இற்றைக்கு நாற்பது நாற்பத்தைந்து வருடங்களுக்கு முந்தி யாழ்ப்பாண நாட்டிலுள்ள மரங்கள் தறித்து வெட்டி வியாபார நிமித்தமாக, பருத்தித்துறை முதலிய துறைமுகங்கள் மூலம் வரைவின்றி இந்தியாவிற்குத் தோணிகள் வாயிலாக அனுப்பப்பட்டு வந்தமையை நாம்அறிவோம்; ஆனாற் காலகதியில் இத்தீமை நின்றுவிட்டது.

உலக மூதல்யுத்தம் நடந்த காலத்து உண்டான உணவுப் பஞ்சத்தினால், தம் உணவுப் பொருள்களின் பொருட்டு அந்நியநாட்டை நம்பியிருக்கும் இந்த யாழ்ப்பாண மக்கள் இங்குள்ள பனைமரத்தின் அருமையை அறிந்திருக்க வேண்டியவர்கள் அறிந்தாரல்லர்; அதன் பின்னரும் பனைகளைத் தறித்து வந்தனர்; இந்த இரண்டாம் யுத்த காலத்திலும், யுத்தம் முடிந்த காலமாகிய இப்பொழுதும், இங்குள்ள மக்கள் முன்னெக்காலத்திலும் அநுபவியாத கொடிய பஞ்சத்தின்பாற் பட்டு இடர்ப்படுகிறார்கள்; பனை ஏனைய பலமரங்கள் போற் சில வருடகாலம் நின்று பயனுதவில்லாமற் போகும் வர்க்கத்தைச் சேர்ந்த மரமல்லவென்பது, யாழ்ப்பாண மக்களெவரும் அறிந்த விஷயம். பனை வளர்ந்து பயன்தருவதற்குப் பல வருடம் வேண்டும்; பயன்றரத் தொடங்கிவிட்டால் தரா தொழிதற்கும் பலபல வருடங்கள் கழியவேண்டும்; இது பற்றியே இந்நாட்டின் பனைதரும் பயனையிட்டுச் சொல்லும் "பனை நட்டாயிரம் பட்டாயிரம்" என்ற பழமொழியும் எழுந்தது போலும். பயனறியாத இந்நாட்டு மக்கள் பனையோடு, இங்கு நிற்கின்ற புளியமரம் மாமரங்களையும் பல நூற்றுக் கணக்கில் தறித்துச் சுண்ணாம்புச்சூளைக்கும் விறகுக்கும் உபயோகிக்கத் தலைப்பட்டார்கள்; இதனாற் பழப்புளி இந்தியாவிலிருந்து இங்கு அதிகமாக இறக்குமதி செய்யப்பட, மாங்காய் மாங்கனிகளின் விலையும் இப்பஞ்ச காலத்திலே அதிகப்படலாயிற்று.

இதனைக் கண்ட அரசினர், பயன்தரும் பனைகளை எவரும் தறிக்க வொண்ணாதெனவும், மீறித் தறிப்போருக்கு அபராதம் விதிக்கப்படுமெனவும் பிரமாணஞ் செய்தனர்; இப்படியே சிங்களநாட்டிலும் பலா, ஈரப்பலா முதலிய சிலஉணவுப் பயன்களைத் தரும் மரங்களைத் தறிக்கப்படாதெதென அதிகாரிகள் பிரமாணஞ் செய்தனர்; இப்படிப் பிரமாண மிருந்தாலும் இங்குள்ள மக்கள் பனைமரங்களையும் சிங்கள மக்கள் பலா ஈரப்பலா முதலிய தடுக்கப்பட்ட மரங்களையும் கரவாகத் தறித்து வருகின்றார்களாம்; இதனை யுணர்ந்தே, அன்று, இம்மாகாணத் தலைவர் தாம் பேசியபேச்சில் பனைகளைத் தறித்தன்மையும் இனிமேல் தறித்தலும் தவறென்றும், தறிபட்ட பனைக்குப் பிரதியான தொகைப் பனையை விதையிட்டு ஆக்க வேண்டுமென்றுங் கருத்துப் படப் பேசினார்; மாகாணத்தலைவர் புகட்டியபுத்தி இதமானது; பழைய நிலைமையில் இங்கே பனைகள் நின்றால் இப்பொழுது எங்களூரில் நேர்ந்திருக்கும் பஞ்சம் எங்களை "அசைக்கவும்" மாட்டாது. ஆனால் புத்தியீனமான கருமத்தைச் செய்துவிட்டுக் கழிவிரக்கங் கொள்வதால் ஆம் பயன் யாதுமில்லை; இனியேனும் புத்தியாக நடப்பதற்கு இந்நாட்டு மக்கள் முயலவேண்டும்; உள்ள பனைமரங்களையும், ஏனைய பழமரங்களையுந் தறியாது பயன் தரவிடுத்து, வாய்த்தவிடமெல்லாம் பனையையும், மா, புளி, பலா முதலிய பழமரங்களையும் ஆக்கத் தொடங்குவரேல், அவர் தமக்கும் தம் வழித்தோன்றல்களுக்கும் நன்மை செய்பவராவர்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—125)

### "பழம் நழுவிப் பாலில் விழுந்தவாறு"

தம்முடைய ஊரைச் சேர்ந்தவுடனே வேங்கடாசல சாஸ்திரியார், தலைமையாசிரியரின் தகப்பனார் தாயாருக்கு மகனுடைய சுகத்தைப்பற்றியும் மகன் மணஞ்செய்ய நிச்சயித்திருக்கும் பெண்ணைப் பற்றியும் சொல்லி, பழம் நழுவிப் பாலில் விழுந்தவாறு அந்தப் பெண் தங்களுடைய சொந்தப் பெண் என்பதனையும் எடுத்துச் சொல்லி, அதுவே உங்கள் மகனுக்கு வாய்த்த சம்பந்தமென்றுங் கூறிமுடித்தார். கேட்ட பெற்றோரும் ஆனந்த மடைந்தனர்; அதன்பின்னர் மகன் தன் பெற்றோருக்கு எழுதித் தம்மிடம் கொடுத்த கடிதத்தை வேங்கடாசல சாஸ்திரியார் தகப்பனாரிடங் கொடுக்க, அவர் படித்து மகிழ்ந்தார். அக்கடிதத்தில் "பாட்டனார் சொல்வதைக் கேட்டபின் உங்களுக்கும் சம்மதமானால் விவாகத்திற்காகிய சுபநாளை நிச்சயித்து முந்தியே தெரிவியுங்கள்" என்னும் வரையப்பட்டிருந்தது; தலைமையாசிரியரின் தந்தையார் தமது சிறிய தகப்பனாராகிய சாஸ்திரியாரோடு கலந்து யோசித்து இரண்டு வாரம் பிந்தி ஒரு சுபநாளை நிச்சயித்து, குறித்த சுபநாள் பெண் வீட்டாருக்கும் இணக்கமாக விருந்தால், அந்நாளில் விவாகத்தை நடத்துவது உத்தமமாகும் என்று தம் மகனுக்கு ஒரு கடிதம் வரைந் தனுப்பினார்; தந்தை அனுப்பிய கடிதத்தைத் தலைமையாசிரியர் படித்துவிட்டு இராமச்சந்திரனைத் தமது வாசஸ்தானத்திற்கு வரச் செய்து, அவனுக்கு விஷயத்தைத் தெரிவிக்க, அவன் உடனே மீண்டு போய்த் தன் அபிமானப்பிதாவோடுங் கலந்து யோசித்து, மணமகன் பக்கலார் நிச்சயித்துத் தெரிவித்த விவாக முகூர்த்தம் பெண்வீட்டாருக்கும் பொருத்தமானதெனக் கண்டான்; நாள் நிச்சயஞ் செய்தமை அங்கிருக்கும் இரஞ்சிதம் இங்கிதம் விசுவநாதன் விசாலாட்சியெல்லார்க்கும் தெரிவிக்கப்பட்டது; இந்த மங்கல செய்தியை யறிந்த விசாலாட்சி இங்கிதத்திற்குச் சொல்லி மகிழும்படி இங்கித மிருக்கு மிடத்திற்குப் போதலும், அங்கே இங்கிதமும் இரஞ்சிதமும் ஒருங்கிருக்கக் கண்டாள்; இவள் வரவைக்கண்ட அவர்கள் இருக்கைவிட் டெழுந்து முற்பட்டுச் சென்று விசாலாட்சியின் கைகளை ஆளுக்கொன்றாகப் பற்றிஅழைத்துக் கொண்டு வந்து தங்கள் மத்தியில் இருத்தினார்கள். இருந்த விசாலாட்சி 'இரஞ்சிதத் தங்கைச்சியின் கலியாணக் காட்சியைக் காணவந்த விடத்தில், இங்கிதத் தங்கைச்சியின் கலியாணக் காட்சியையாயினும் காணும் பேறு பெற்றோம்: இதுவும் எங்களுக்குச் சந்தோஷந்தான்" என்றாள்; கேட்டுக்கொண் டிருந்த இரஞ்சிதம் நாணம் தலைக்கொள்ள நிலத்தைப் பார்த்தவண்ண மிருந்தாள்; இங்கிதத்தின் முகம் மாறுபாடடைந்தது; இங்கிதம் விசாலாட்சியை முகவாட்டத்துடன் பார்த்து, "அக்கா, நீங்கள் இங்கே வந்தது என் அக்காவின் விவாக சோபனத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டாடிப் போவதற்கா? இதனை உண்மையாய் இப்பொழுது தான் நான் அறிந்தேன்; அக்கா, என்னுடன் பிறவாவிட்டாலும், உடன்பிறவா மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும் என்றபிரகாரம், இரஞ்சித அக்கா உடன்பிறந்த சகோதரத்தைக் காட்டிலும் எனக்கு அதிகமானவர்; ஆனதனால் என் அக்காள் கன்னிகையாக விருப்ப இளையாள் நான் கல்யாணஞ்செய்ய நினைப்பதுவுந் துரோகம்" என்று கண்களில் நீர்ததும்பச் சொல்லி யெழுந்து நின்றாள்.

### தாராதத்தஞ் செய்வது யார்?

உடனே பக்கலி லிருந்த இரஞ்சிதமும் விசாலாட்சியும் முறையே அவள் கண்ணீரை முன்றானையால் ஒற்றி அவளைத் தேற்றினர்; பின்னரும் விசாலாட்சி இங்கிதத்தைப் பார்த்து, 'தங்காய் இங்கிதம்; இரஞ்சிதத்தின் விவாகந்தான் முதல் நடப்பது முறை; சகோதரி இரஞ்சிதத்திற்கு விவாகம் நிச்சயமா யிருப்பதனாற் பிந்தி நடந்தாலும் பிழையல்ல; ஆனால் ஒரு கருமத்தை யிட்டுத்தான் யோசிக்கிறன்; நாளைக்கு உமக்கு விவாகம் நடக்கும்போது, உம்மைத் தாரதத்தஞ் செய்வது யார் என்பதையிட்டுத்தான் சிந்திக்கிறேன்...." என்று சொல்லி முடிப்பதற்கிடையில் இரஞ்சிதம் விசாலாட்சியைப் பார்த்து, "ஏன், அக்கா, நீங்களும் விசுவநாத அண்ணாவுஞ் செய்து கொடுக்கலாகுமே; நாங்களிருவரும் உங்களிருவரையும் முறையே எங்கள் தாய் தந்தையராகப் பாவித்துத்தான் நடக்கிறோம்; அப்படி நடப்பதில் ஏதும் பிழை செய்திருந்தாற் பொறுத்துக் கொள்வது உங்கள் கடனாகும்; வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய் தேடுவதா? அக்கா நீங்களிருவிரும் தாரதத்தஞ் செய்யலாகுமே" என்றாள். 'தங்காய், நீர் சொல்வது நியாயம்; ஆனால் வருண வேற்றுமை அப்படிச் செய்தற்கு இடையூறாக விருக்கிறதே; நீங்கள் உடன்பட்டாலும் உங்கள் இனசனத்தார் சுற்றத்தார் உடன்படார்களே; இவைகளை யிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்று விசாலாட்சி சொல்லுதலும், "அக்கா, ஆளில்லாத் துயரம் அழுதாலும் தீராது; இதற்கு நான் என்ன செய்யலாம் என்று கவலைப்பட்டாள் இரஞ்சிதம்; 'தங்காய், இரஞ்சிதம், கவலைப்படவேண்டாம், உபாயஞ் சொல்லித் தந்தால், தட்டாமல் அப்படியே செய்வீரா" என்று விசாலாட்சி புன்னகையுடன் கேட்க, தங்கைச்சியின் நன்மையை உத்தேசித்து என்னாற் செய்யத்தக்கதைச் செய்யத்தானே வேண்டும்" என்று சிந்தனையோடு பதில் சொன்னாள் இரஞ்சிதம்; "தாராதத்தஞ் செய்யப் பெண்ணுக்குப் பெற்றார் உதவாரானால், பெண்ணின் சிறியதந்தை சிறிய தாய் இருவருஞ் செய்யலாம்; அவர்களுமில்லையாயின், பெண்ணின் தமயனும் அவன் மனைவியுஞ் செய்து கொடுக்கலாம்; ஐந்து பிதாக்களில் தமயனும்ஒருபிதாவாக மதிக்கப்படுகிறான்; ஐந்து தாயருள், தமயன்

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊதாரித்தனம்!

## அடுத்துக் கெடுக்கும் அரசியல்வாதிகள்

.... ஸ்ரீதரன் ...

எல்லாரும் பாரதக் கதையைப் படித்திருக்கலாம். துரியோதனனுடைய மாமன் சகுனி: இவ் விருவரும் முற்பிறப்பில் தீராப் பகைமை பூண்ட அசுரர் என்றும், துரியோதனன் மீதுள்ள பழியைத் தீர்ப்பதற்காகச் சகுனி, துரியோதனனின் மாமனாகப் பிறந்து, அவனையண்டி, அடுத்துக் கெடுத்து ஈற்றில் அவன் (துரியோதனன்) குருக்ஷேத்திர யுத்தத்திலே வீமன் கதையால் மாண்டு பிணமாகக் கிடக்க, நரியாக வந்து அப்பிணத்தை யுண்டு, தன் வஞ்சத்தைத் தீர்த்தான் என்பர் பாரதகாரர். நேர்ப்பகைமை நன்று: அப்படிப் பகிரங்கமாகப் பகைமை பாராட்டுபவரால் வரும் ஆபத்து அதிகம் இராது எனலாம். நட்புப் பூண்டு "கழுத்தை நெரிப்போர்" விஷயத்தில் தான் அனைவரும் சாவதானமாக இருக்க வேண்டும் என்பர்.

* *

### கொடிறும் பேதையும்

இன்று எங்கள் இலங்கையிலே 7 மந்திரிமார்களும், 51 பிரதிநிதிகளும் உளர். இவர்கள் இந்த இலங்கைக்கு ஏதும் உருப்படியான சேவைகள் செய்திருக்கின்றனரா? இல்லை யென்றே துணிந்து கூறலாம். மந்திரிமாராக வுள்ளவர்கள் மாதந்தோறுந் தனித்தனி 1500ரூபாவும், அரசாங்கசபைப் பிரதிநிதிகள் தனித்தனி 500 ரூபாவும் வேதனமாகப் பெற்று 10 ஆண்டு காலத்தில் இந்நாட்டை, தோலிருக்கச் சுளை வாங்கிய தன்மை போல, அந்தரமான நிலைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். பொருளாதார நிபுணர்கள் இவர்களுக்கு எப்படிப் புத்திமதி கூறியும் என்? பத்திரிகைகள் ஓலமிட்டு மென்? கொடிறும் பேதையும் கொண்டதுவிடா என்றுங்கு இந்தப் பிரகஸ்பதிகள் இலங்கையைப் படுகுழியில் தள்ளவே கங்கணமகட்டி நிற்கின்றனர் என்று கூறின் அது மிகையாகாது.

* *

### நோக்கம் என்ன?

புதிய அரசியல் இன்னும் சிலமாத காலத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட விருக்கிறது. வருகிற சித்திரைமாதம் வரையில் இப்போதுள்ள அரசாங்கசபை கலைக்கப்பட்டுவிடும். அதறகிடையில் உள்ள 6 மாத காலத்துக்குள்ளும், தாம் செய்ய வேண்டிய அநீதிகளைச் செய்து, இந்நாட்டைக் குட்டிச்சுவ ராக்கச் சில அரசாங்கசபைப் பிரதிநிதிகளும், மந்திரிமாரும் எண்ணி யிருக்கின்றனர் என்று அறியக்கிடக்கின்றது வேற்று நாடுகளில் இலங்கைக்கென விசேஷமான வியாபாரப் பிரதிநிதிகளை நியமிக்கும் விஷயத்தில் நமது மந்திரி சபையினர் இன்று ஈடுபட் டிருக்கின்றனர்கள். இந்த வியாபாரப் பிரதிநிதிகளால் இந்நாட்டுக்கு ஏதும் பயன் கிடைக்குமா? இப்போதாதானும் இங்கிலாந்திலே, பம்பாயிலே இலங்கையின் வியாபாரப் பிரதிநிதிகளாயுள்ளவர்களால் இதுவரை இந்நாட்டுக்கு என்னபயன் கிடைத்துவிட்டது என்பதை நாம் கேட்கிறோம். கழுத்துறைப் புல்லுத் தொப்பிக்கும், முந்திரிகைக் கொட்டைக்கும், கருங்காலியாற் செய்த பாவைப்பிள்ளைகளுக்கும் விளம்பரஞ் செய்வதில் இங்கிலாந்திலே லட்சக்கணக்கில் சம்பளம் கொடுத்து ஓர் பிரதிநிதியை வைத்திருக்கவேண்டுமா? இந்தப்பிரதிநிதி இதுவரையில், இலங்கையின் வர்த்தகத்தை எவ்வழியில் முன்னேற்றினர் என்பதை இலங்கை யரசாங்கம் புள்ளிவிபரங்களுடன் ஓர் அறிக்கைமூலம் வெளியீட்டால் என்ன?

* *

### செய்யவேண்டிய வேலைகள்

லண்டனில் உள்ள வியாபாரப் பிரதிநிதி ஆற்றிய சேவைகளையும் பார்க்க, ஏனைய நாடுகளில் வைக்கவிருக்கும் பிரதிநிதிகள் இனிச்செய்யப் போவதில்லை இலங்கையின் பொருளாதார நிலைமை வரவர மோசமாகி வருகிறது. கோடிக் கணக்கான ரூபாய்களை இப்படியான பிரதிநிதிகளின்மீது செலவழிப்பதனை விடுத்து, இந்த நாட்டிலே கைத்தொழில்களை அரசாங்கம் நிறுவவேண்டும். புதிய யந்திரங்களை அழைப்பித்துத் துணி முதலியன ஆக்குவித்தல் வேண்டும். நிலங்களைப் பண்படுத்தி விளைபொருள்களை அபிவிருத்தி செய்யவேண்டும். தமக்கு வேண்டிய ஓர் சிலர்க்குப் பதவிகளைக் கொடுப்பதற்காகவே இலங்கை மந்திரிமார் புதுப்புது உத்தியோகங்களை ஆக்குகின்றனர் என்ற ஓர் அபவாதம இன்று பரவி யிருக்கிறது மந்திரிமார் தங்கள் நண்பர்களுக்கும் சுற்றத்தவர்களுக்கும், பதவிகள் பெற்றுக்கொடுக்க வேண்டுமாயின் அல்லது தமக்குப் போட்டியாக அரசியலில் வரவிருப்பவர்களை, இப்படியான பதவிமோகம் காட்டி அந்நிய நாடுகளுக்கு அகற்ற வேண்டுமாயின், ஏழைமக்களின் பணத்தை இப்படி விநியோகப்படுத்துதல் ஆண்டவனுக்கே அடுக்காது. இப்படியான துர்நோக்கம் படைத்துள்ள மந்திரிமார்க்குத் தலையாரி மிஸ்ரர். சேனநாயக்கா. இவர் பதவியிலிருக்கும் வரை இந்த ஊழல்களும், ஊதாரித்தனமும் நிகழ்ந்துகொண்டே வரும். இவரையும் இவரது வாலைப் பிடித்துக் கொண்டு தொங்குபவர்களையும் இலங்கை யரசியலிலிருந்து அகற்றி அவர்கள் மீண்டுந் தலைக்காட்டாதபடி செய்தல் பொதுசனங்களுடைய கடமை.

# மதப்பித்தர் ஜின்னா!

## பிரிட்டிஷாரின் துணையே அவர் உளறலுக்குக் காரணம்

வங்காளத்திலே, பம்பாயிலே, பீகாரிலே, இன்னும் மற்றும் சிலஇடங்களிலே இதுகாறும் நிகழ்ந்த வகுப்புக் கலவரங்களால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது ஆருயிரை இழந்தனர். இதற்கெல்லாம் காரணம் ஜின்னா சாய்புதான் என்பதை அகில உலகும் அறியும். இந்தக் கலகங்களின் பயனாக, இந்தியாவுக்கிருந்த நல்ல பெயர் அன்னிய நாடுகளில் ஓரளவுக்குப் பங்கப்பட்டுவிட்டது. இந்தியாவில் உள்ள முஸ்லீம் தலைவர்கள்சரி, ஹிந்துத் தலைவர்கள் சரி, இக்கலகங்கள் இனியும் நடவாமலிருக்கத் தம்மாலானமட்டும் முயற்சி செய்ய, ஜின்னா மாத்திரம் இன்னும் தன் சுபாவமான மமதையுடன் இருக்கிறார், இவர்க்கு இதுகாறும் நிகழ்ந்த உயிர்வதைகள் எவ்வித பயனும் அளித்ததாகத் தெரியவில்லை. நேர்மாறாக, சாய்பு இன்னும் தமது பாகிஸ்தான் பல்லவியைப் பாடி எரியும் கொள்ளியை ஏறத்தள்ளுகிறார். இந்தியாவை இரண்டு துண்டாக்கி ஹிந்துஸ்தானத்தை ஹிந்துக்களுக்கும், பாகிஸ்தானத்தை முஸல்மான்களுக்குக் கொடுத்துவிட்டால்தான் இந்தியாவிலே சமாதானம் நிலவும், அதுவரை இப்படியான கலவரங்கள் நிகழ்ந்துகொண்டே வரும் என்று ஜின்னாசாய்பு சென்றவாரம் அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்குக் கூறினார் என்று தெரிகிறது

பாகிஸ்தான் கொடுக்காவிட்டால் இந்தியாவிலே கலகங்கள் நிகழும்தான் என்று பச்சைப்படியாகச் சொல்லும் ஜின்னாவின் மனப்பான்மையை யென்னென்று கூறுவது? கேவலம் ஓர் பொறுப்பற்றவன் இவ்வசனங்களைச் சொல்லியிருப்பானேயானால், ஓர் பைத்தியகாரனுடைய உளறுபடையென்று அதனைப் புறக்கணிக்கலாம் ஜின்னா ஓர் பொறுப்பற்றவரா யிருந்தாலும் ஓர் ஸ்தாபனத்தின் தலைவர் என்ற நியதியில் அவருடைய வாக்கியங்கள், மதவெறி பிடித்த அவர் குழுவினர்க்குப் பலாத்காரத்தைத் தூண்ட ஏதுவாகும். இதனை இராஜப்பிரதிநிதி வேவல் அறியாரா? இதனை வேவல் அறிந்தும் அறியார்போல இருப்பதன் காரணம் என்ன? வகுப்புக் கலவரங்களைப் பகிரங்கமாகத் தூண்டும் இந்தஜின்னாவை, இராஜப்பிரதிநிதி என் இன்னும் சும்மா விட்டிருக்கிறார் என்பது விளங்கவில்லை. இவருடைய நாவை அடக்கவேண்டும். அன்றேல் அவரை வைக்கவேண்டிய இடத்தில் வைக்கவேண்டும். பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும்ஆட்டும் பிரிட்டிஷ் இராஜ தந்திரம் இனியும் செல்லுபடியாகமாட்டாது என்பதை ஹிந்துஸ்தானம் இராஜப் பிரதிநிதி வேவலுக்குத் தெரியப்படுத்துமாக. வேவலுடைய நிலைமையை அவதானிக்குமளவில், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நல்லெண்ணத்தில் எவர்க்கும் சந்தேகம் ஏற்படவே செய்கிறது. இந்தியா முன்னேற வேண்டுமானால், வகுப்புக் கலவரங்கள் ஒழியவேண்டுமானால், ஜின்னாவின் மிரட்டல்கள் ஒழிய வேண்டுமானால், பிரிட்டிஷ் அதிகாரம் உடன் இந்தியாவை விட்டு அகலவேண்டும். எது எப்படி நிகழ்ந்தபோதிலும், வேவலும்,பிரிட்டிஷ் அதிகாரவர்க்கமும், ஜின்னாவை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்பதை முஸ்லிம் காடையர் உணர்ந்திருக்கின்றனர் வங்காளச்சம்பவம் அதற்கு ஓர் உதாரணம்,

# படங்கள் எரிந்தன

## கொழும்பு ரீகல் மாளிகை விபத்து

சென்ற திங்கட்கிழமை காலை கொழும்பு ரீகல் மண்டபத்துக்கருகாமையில் உள்ள சினிமாப்படக் கிட்டங்கியில் காத்திராப்பிரகாரம் தீ விபத்து ஏற்பட்டது. அதன்பயனாகப் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான "ரீல் பிலிம்கள்" எரிந்து சாம்பராகிவிட்டன.

நாசமான படங்கள் யாவும் "இன்ஷியூர்' செய்யப்பட்டன. எனவே அவற்றின் கிரயம் கீமாக்கம்பெனிகளினால் செலுத்தப்பட்டுவிடும். இத்தொகை ஒருலட்சம் ரூபாவாகும். தீ விபத்தின் காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை இரகசியப் பொலிசார் இவ்விஷயமாக விசாரணை செய்துவருகின்றனர்.

### புதிய சமாதான நீதிபதி

வலிகாமம் மேற்கிலுள்ள பொதுஜனங்கள், வட்டுக்கோட்டைத் திருஞானசம்பந்த வித்தியாசாலையில், முக்கறிஞர் திரு. வி, நாகலிங்கத்தைக் கௌரவிப்பதற்காகச் சென்றவாரம் ஒருஉபசாரவிழா நடத்தினர். திரு. ந கலிங்கத்தை ஒரு சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட் டுள்ளது பற்றியே இவ்விழாக் கொண்டாடப்பட்டது, திரு. எஸ். நடேசன் (அரசாங்கசபைப் பிரதிநிதி) தலைமை வகித்தார். இக் கூட்டத்தில் யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதி திரு. ஆர். ஆர். செல்லத்துரை, திரு. எஸ். இராசரத்தினம், திரு. கே. கனகரத்தினம், திரு. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழி வாற்றினர்.

### லஞ்சத்தை ஒழிக்க

சென்ற திங்கட்கிழமை நிகழ்ந்த இந்திய மத்திய சட்டசபைக் கூட்டத்தில் கைக்கூலி கொடுத்தல், பெறுதல் என்னும் லஞ்ச வழக்கத்தை ஒழிக்க, சர்தார் வல்லபாய்படேல் ஓர் பிரேரணையை எடுத்தாண்டார்.

### ஆசிய மக்கள் மகாநாடு

டெல்கியில் நடைபெற விருக்கும் சர்வ ஆசிய மக்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பதற்காக ஸ்ரீமதி சரோஜினி நாயுடு டெல்கிக்குப் போய்விட்டார்,

### மா வந்தது

சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்புத் துறைமுகத்தில் 8000 தொன் மா இறக்குமதியாயிருக்கிறது.

# மாதா வயிறெரிய மகேசுர பூசையா?

## லண்டனில் விருந்துபசாரங்கள்

லண்டனில் இலங்கையின் பிரதிநிதியாக மிஸ்ரர் ஜி. வி. எஸ் கொறியா இருக்கிறார் இவர் அங்கேயிருக்கும் காலத்திலே "இலங்கை மாளிகை"க்கு விஜயம் செய்பவர்களுக்கு விருந்து கொடுப்பதும் இவர் கடமையில் ஒன்றாகும் அதற்காக பெருந்தொகையான இலங்கை அரிசி அவர்க்கு அனுப்பப்படவிருக்கிறது என்று மிஸ்ரர் எஸ். ஜே எப். பண்டாரநாயக்கா என்பவர் அறிவிக்கிறார்.

இந்த இலங்கையிலே லட்சக்கணக்கான மக்கள் அரைநேரக் கஞ்சிக்கும் வழியில்லாது தவிக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே, விருந்து உபசாரத்துக்காக, ஏலாப் புடைக்க உண்டு, சகல போகங்களையும் அநுபவித்துவரும் லண்டன் பிரமுகர்களுக்கு விருந்துபசாரம் அளிப்பதற்கு இந்த ஏழை இலங்கையின் அரிசிதானா பெருந்தொகையில் அனுப்பப்படவேண்டும்.

இலங்கையில் விளையும் அரிசியில் ஒரு மணிதானும் புறநாடுகளுக்கு அனுப்பப்படவில்லை என்று உணவு விநியோகப் பகுதியார் இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் ஓர் அறிக்கை விட்டனர் அப்படியானால் [illegible] அனுப்பப்பட விருக்கும் அரிசியைப்பற்றி இவர்கள் என்ன கூறப்போகின்றனரா?

### கலியாண காலத்தில் துணிகள்

பொதுஜனங்களிடம் இப்போதுள்ள கூப்பன்களுக்கே போதிய புடைவை கிடைக்காமலிருப்பதை முன்னிட்டு. கல்யாண காலங்களில் மணமகளுக்குப் புடைவை வாங்க விசேஷக் கூப்பன்கள் வழங்குவதைத் தீவிரமாகக் கட்டுப்படுத்த புடைவைக் கட்டுப்பாட்டதிகாரி தீர்மானித்திருக்கிறார்.

### 500 உப தபாற் கந்தோர்கள்

தபால் தந்திப் போக்குவாத்து வசதிகளின்றி இருந்துவரும் 500 இடங்களில் உபதபாற்கந்தோர்களை நிறுவப் போக்குவரத்து மந்திரி உத்தேசித்திருக்கிறார்.

### மலேயா இலங்கையர்

மலேயாவில் இருந்து நாளைத்தினம் ஓர் கப்பல் வரவிருக்கிறது. அதில் 1200 பேர் வருகின்றனர் என்றும் அவர்களிற பெரும்பான்மையினர் மலேயா அரசாங்க உத்தியோகத்தர்கள் என்றும், அவர்கள் 6 மாதலீவில் தம் தாய்நாட்டுக்கு வருகின்றனர்என்றும் தெரிகிறது

### இந்தியா தோற்றது

ஐக்கியநாடுகளின் ஸ்தாபனப் பாதுகாப்புச் சபையில் 3 ஸ்தானங்களுக்கு கொலம்பியா, சிரியா, பெல்ஜியம், இந்தி[illegible] நாடுகள் போட்டியிட்டன. தேர்தல் முடிவில் முற்கூறிய 3 நாடுகளுமே தேர்ந்தெடுக்கப்பட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகாரக் கர்வம்!

## "எனது பிரசைகள்"—ஜோர்ஜ் சில்வா

மிஸ்ரர் ஜோர்ஜ் ஈ. டி. சில்வா என்பவர் இலங்கையின் வைத்திய சுகாதாரப் பகுதி மந்திரி. இவர் கண்டிநகரப் பிரதிநிதியாக அரசாங்கசபைக்குத் தெரிவு செய்யப்பட்டுப் பின்னர் ஒருவாறு மந்திரியாகியவர். இவர் ஓர் அதிசயப் பேர்வழி. உற்சாக மிகுதியில் பல சமயங்களில் எதனையும் உளறிவிட்டுப் பின் இடர்ப்படுவது இந்த மகானுபவர்க்குச் சுபாவமாகிவிட்டது.

இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன், மிஸ்ரர் ஜோர்ஜ் சில்வாவுக்கு என்றுமில்லாத ஓர் உற்சாகம் பிறந்தது. தமது பரிபாலனத்தில் உள்ள ஆஸ்பத்திரிகள் விஷயமாக அவர் ஓரிடத்திற் பேசியபோது, "டக்ரர்மார் பயிற்றப்படும் வரைக்கும் நான் எனது பிரசைகளை நோயால் வருந்த விடமுடியாது" என்னும் கருத்துப்படக் கூறினர். இவருடைய உதார குணத்தை, பரோபகார சிந்தையை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. புத்ததாஸ என்ற ஒரு சிங்கள அரசன் தான் இப்படியாக அவதாரம் எடுத்திருக்கிறாரோ என்று நாம் இந்த மிஸ்ரர் சில்வாவின் பரோபகாரத்தை நினைந்து வியந்ததுண்டு. ஆனால் ஒருவிஷயம் இச்சந்தர்ப்பத்தில் நாம் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

மிஸ்ரர்சில்வா 'எனது பிரசைகள்" என்று கூறினரே! எந்த நாட்டிலாவது அரசியல் மன்றத்து மந்திரிகளாயுள்ளார் இப்படிக்கூறும் வழக்கம் இல்லை. நாட்டு மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இப்படிக் கூறமுடியாது. முடிபுனையும் மன்னர் மாத்திரமன்றி, முசோலினி, ஹிட்லர் முதலாம் சர்வாதிகாரிகளும் "எனது பிரசைகள் என்று கூறுவர்: கேவலம், ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் ஜனப்பிரதிநிதி அதே ஜனங்களை நோக்கி "எனது பிரஜைகள்" என்று கூறுவதன் அர்த்தம் என்ன? மிஸ்ரர் சில்வா ஒன்றில் ஓர் மூடசிகாமணியாக விருக்கவேண்டும். அல்லது சர்வாதிகாரக் கர்வம் பூண்டவரா யிருத்தல் வேண்டும்!

பொல்லாது சொல்லி
மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத்
துயர்ப்படுத்தும் — நல்லாய்
மணலுள் முழ்கி மறைந்து
கிடக்கும்
நுணலுந் தன் வாயாற் கெடும்.

மிஸ்ரர் சில்வா ஓர் ஐக்கிய தேசியக் கட்சி யங்கத்தவருமாவர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது இதே சர்வாதிகாரத் தொனியில் முன்னொருநாள், இக்கட்சியின் தான் தோன்றித் தலைவர் மிஸ்ரர் சேனநாயக்கா கூறியதும் ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. இவற்றை நாம் ஆலோசிக்கும்போது, இந்த இலங்கையின் மன்னர்களாக - சர்வாதிகாரிகளாக விளங்கவேண்டும் என்பது தானா இக்கட்சியின் நோக்கம்? என நினைக்கவேண்டி யிருக்கிறது. ஐக்கியதேசியக்கட்சி என்பது சர்வாதிகாரக்கர்வம் பிடித்த ஓர் கூட்டம் என்று ஒருவர் இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் கூறியதை இச்சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்டவேண்டியிருக்கிறது. சேனநாயக்காக் கோஷ்டி அதிகாரத்துக்கு வந்தபின் அரசாங்க நிலையங்களிலே சிங்ஹக் கொடியை ஆரோகணித்தனர். இது சிங்களமக்களின் ஜாதீயக் கொடியாகும். இலங்கையிலே அரசபாஷையாகச் சிங்களத்தை ஆக்கவேண்டும் என்று அவருடைய மகன் வாதாடினர். விவசாயப் பட்டாளம் அவசியசேவைப் பட்டாளம் முதலாய ஸ்தாபனங்களில், தமிழரும், ஏனைய சிறுபான்மைக் கட்சியினரும் இடம்பெறாதபடி வசதியீனங்கள் செய்து வைத்தனர். கடைசியாக, "எனது பிரசைகள்" என்ற பல்லவியையும் பாடத் தொடங்கிவிட்டனர்; இவையெல்லாம் எதற்கு உற்பாதங்கள்?

# தேர்தல் தரகரா?

## வித்தியாதரிசிகள் சிலரின் வேலை

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரகர்களாகச் சில வித்தியாதரிசிகளும் புறப்பட்டு விட்டார்களென்று பல முறைப்பாடுகள் இப்போது வருகின்றன. கல்விப்பகுதியிலே யுள்ள வித்தியாதரிசிமார் இலங்கை மக்களின் பொதுப்பணத்தி லிருந்து வேதனம் பெறுபவர் அன்றி, ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகரிடமிருந்தோ வேறெக் கட்சியாளரிடம் இருந்தோ வேதனம் பெறவில்லை யென்பதை இச்சந்தர்ப்பத்தில் உணர்ந்து கொள்ளுதல் நன்மை பயப்பதாகும்.

இவ்விஷயமாகக் கொழும்பு 'ரைம்ஸ்' பத்திரிகையின் யாழ்ப்பாண நிருபர் ஷை பத்திரிகையிற் பின்வருமாறு எழுதுகிறார்:

"நான் சில தமிழாசிரியர்களையும், ஆங்கில ஆசிரியர்களையும் சந்தித்தேன். சில வித்தியாதரிசிகள் பகிரங்க கூட்டங்கள் கூட்டி ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகர்க்கு ஆதரவு தேடற்கான பிரசாரணங்கள் அக் கூட்டங்களிற் செய்கிறார்கள் என்று இவ்வாசிரியர் எனக்குத் தெரிவித்தனர், இன்னும் அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தலில், ஆசிரியராயுள்ளார் என்னசெய்ய வேண்டும், யார் யாரை ஆதரிக்க வேண்டும் என்றின்னோரன்ன போதனைகள் இவ்வித்தியாதரிசிகளினல் கொடுக்கப்படுகின்றனராம். இப்படியான அதிகாரிகளுடைய எண்ணத்துக்கு சம்மதியாதுவிட்டால் 'தங்கள் கஞ்சிக்கு மண்போட்டு விடுவார்கள்' என்று இந்த ஆசிரியர் அஞ்சுகின்றனர்.

"இற்றைக்குச் சில நாட்களுக்கு முன் காரைநகரில் ஓர் வாலிபர் சங்கத்துக்கூட்டம் நிகழ்ந்தது. அதில் தீவுப்பகுதி அங்கத்தவர் சமுகமாயிருந்தார். இவர் மீண்டும் அங்கத்தவராக வரவிரும்புகிறார். அன்று சொற்பொழிவு செய்த ஓர் வித்தியாதரிசி, இவர் சமுகத்தில், 'இவரைப் போன்ற பிரதிநிதி உங்களுக்குக்கிடைக்கமாட்டாது. இவரையே மீண்டும் தெரிந்தனுப்புங்கள்' என்று ஓர் பாட்டம் தேர்தற் பிரசாரமும் புரிந்தனர்."

# திருக்கோணமலைக் கல்வெட்டு

.... — அ. வி. ம. — ....

பாடல்பெற்ற சிவஸ்தலமாகிய திருக்கேதீச்சரம் சைவ மதத்தரால் நன்கு மதிக்கப்படும் ஒரு தொல்பதி. இக்கோயிலைப் பாலிப்பதற்காக அக்காலச் சோழமன்னன், குளக்கோட்டனை அனுப்பியதும் அவன் பரிசனரை அழைத்து வந்து குடியேற்றினதும் அவர்கள் தத்தமக்குத் தொழில் கற்பித்தும் திருப்பணியாதிய கைங்கரியங்களைச் செய்ததும் ஏட்டில் நன்கு பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவை அழகிய பாக்களில் எழுதி அமைக்கப்பட்டமை இன்னும் விழுப்பந் தருவதாகும். ஏட்டில் உள்ள பாக்கள் சில சிதைவுபட்டுள. வேறு சில முற்றாக அழிந்துவிட்டனபோல் தோன்றுகின்றது.

காப்பு

உதயமால்வரை ஒண்கதி
ரென்னவென்
இதயவம்புயத் தென்றும்
விளங்குக
மதகடாசல வாரண மாமுகன்
முதலைங்கர மூர்த்தி
பதாம்புயன்.

1 சொல்லுற்ற சீர்க்குளக் கோட்டு
ராமன் சொற்படியே சொல்லக்
கல்வெட்டுப் பாடெனப் பாடினேன்
பாடிக்கதை பொருளாய்
அல்லுற்ற கண்டர்தம் நற்பொற்
பதம் என் நெஞ்சமுழுத்தி
வெற்றலுற்ற நற்சீர்க் கவிராச
ருதய விற்பன்னனே.

2 திருமருவு மனுநீதிகண்ட சோழன்
செகமகிழ வருராம தேவர்தேவன்
மருமருவு திரிகயிலைப் பெருமை கெட்
டுத்தானுமவன் வந்ததும்வண்செய்
பின்பு
மருமருவு மாலயமும் கோபுரமும்
சிகரமும் மணிமதிலும்
மண்டபமும் நீராவிக்
கருமருவு முகில்களும்சேர் திருக்
குளம்செய்ததுவும் கல்வெட்டாய்ச்
சொல்லவென

3 சொல்லரிய திரிகயிலைப்
பெருமைதன்னைத்
தூயமா புராணக்கதையிற்
சொன்னதுண்டு
வல்லதொரு வன்னியையும் தானம்
வரிப்பத்திகுவைகள் வந்தவாறும்
நல்லதொரு பூசைவிதி நடப்பதும்
நடந்தேயினி நடக்கும்
நடத்தை யாவும்
சொல்லெனவே தொடுத்த திரியல்
வைகுண்ட கவிராசனும்
சொல்லும் சீரே.

4 சீரிலங்கு சோழவள நாட்டிலங்கு
ஒருநாளைக் கிரண்டவணச்
செம்பூச்சம்பா
ஏரிலங்கு மரிசிவரக் களியமுது பல
செலவும் ஈந்த ஈசன்
பாரிலிந்தப் பூசைவிதி நடத்தி நீமேல்
யாது பகர்வனென்றே
ஏரிலங்கு குளக்கோட்டன் நாற்கால்
மண்டபத்திருந்து எண்ணினனல்

5 திருந்து திரிகயிலை வெற்பிற்
சிவாலயமும் கோபுரமும்
சிறக்க நாட்டிப்
பரிந்துலகோர் பவமறுக்கும்
பாவநாசச்சுனையும் பரிவாய்ச்
செய்து
தெரிந்த புகழ்த் திருக்குளமும்
வயல்வெளியும் திருத்தி
யார்க்கெனவிந்து
பரிந்தரன் தொழும்பு செய்ய
ஆள்வேணுமென
நடந்தான் பருதிவேந்தன்

6 பருதி குலத்துதித்த குளக்கோட்டு
ராமன் பங்குனி உத்தரமாமோர்
பதினைந்தாம் தேதிதன்னில்
வரிசையுடன் சென்று மருங்கூரி
லேகியவர் நல்லோர்கள்தம்மை
மரக்கலத்திலேற்றி
அரியதிருக்கோணமலைநாதற்கென்று
ஆனநகரில் ஐயாறு குடியுமேற்றி
உரிமையிது பரவணியே என்று
உரைசெய்தான் சதுர
வேதஞானமூர்த்தி

7 இத்தலத்தில் அரன்கயிலை
ஆலயத்தில் அறைமுகத்தால்
இருப்புநாட்டி
நித்தம் வரும் வரவுகளும் நிதம்
பூசைச் செலவெழுத
நியமஞ்செய்து
அத்தர்முன்னல் ஆலாத்தி
நடமுடனே பண்டிகுத்தல்
ஆதிக்கப்பட்டு அரசர்க்கீதல்
அத்தனையும் தானத்தார் செய்வீர்
என்ன ஏற்ற குடிக்கு
ராசப்பட்டம் ஈந்தான்வேந்தன்

9 வேந்தன் நிர்ணம் அரன்
தொழும்புக்காட்போதாதெண்ணி
உகுத்து மீண்டே
வாய்ந்த வளநாடு சென்று
வரிப்பித்தான்
மூவேழு குடியானோரைச்
சேர்ந்திடப மாதமதில் ஈரைந்தா
மதித்திங்கள் இசைந்து சோதிக்கு
ஏய்ந்தகன்னி முகூர்த்தமதில் அரன்
தொழும்பு செயவிடுத்தான்
ராசராசன்
சன்னிதியில் நீர் செய்யும் தொழும்பு
உமக்கு நாமுரைக்கத்தான்
நீர்கேளும்
நயனஞ்சேர் பட்டாடை கொய்தல்
கட்டல் நல்ல புட்பம் பத்திரங்கள்
எடுத்தல் தூர்த்தல்
மின்னிநிறைவிளக் கேற்றல் தளிகை
தட்டு முட்டு இவைகள்
விளக்கி நித்தம்
உன்னிதமாய் எடுத்தல் நெல்லுக்
குத்தல் சாணிபொறுக்குதல்
மற்றேரிகருமம் முகந்தே ஈதல்


# இலக்கிய வாசகம்

## மூன்றும் புத்தகம்

**நான்காம் வகுப்புப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது;**

(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

இதன் வசனபாகம்: சத்தியவிரதம் பூண்ட அரிச்சந்திர மகாராசனுடைய வரலாறு, இலகுவான இனிய செந்தமிழ் வசனநடையில் 18 பாடங்களாக வகுத்தெழுதப்பட்டுள்ளது.

செய்யுட்பாகர்: பஞ்சதந்திரத்தில் "காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதை (செய்யுள்) நீதிக் கவித்திரட்டு, சதகத்திரட்டு என்னுமிவைகள் அடங்கியுள்ளன பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை யென்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**பிரதியொன்றன் விலை சதம் 60 (அனு 10)**

இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிற் பெறற்பாலன.

19-11-46.

மனேஜர்,
சைவப்பிரகாசயந்திரசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மனைவியும் ஒரு தாயாக மதிக்கப்படுகிறாள்; ஆதலினாலே, தங்காய், இரஞ்சிதம், உங்கள் விவாகம் முந்தி நிறைவெய்துமானால், பின்னர் இங்கிதத்தங்கையின் கலியாணத்திற்கு எவ்வகைக் குறையும் நேராதே; நீங்களிருவீரும் தாரதத்தஞ் செய்யலாமே" என்று அழகுறப் பேசினாள் விசாலாட்சி; கேட்ட இரஞ்சிதம் பதிலொன்றும் பகராது சற்றுநேரம் நிலத்தைப் பார்த்த வண்ணஞ் சிந்தித்தபடி நின்றாள்; சற்றுநேரஞ் செல்ல, "அக்கா, உங்கள் சொல்லைத் தட்டிப் பேசுகிறேனென்று என்னைக் கோபிக்காதீர்கள், என்னுள்ளம் இன்னமும் துறவறத்தையே விரும்புகிறது; நான் என்ன செய்வேன்: உங்கள் விவாகத்தைத் தரிசித்தேன் தங்கையின் கலியாணத்தைத் தரிசிக்கப்போகிறேன்; இவ்வளவும் போதும்" என்று சஞ்சலத்துடன் விசாலாட்சியை நோக்கிப் பன்னினாள் இங்கிதம்: "அம்மா, இரஞ்சிதம் இந்த விஷயமாக நீர் இன்னமும் ஏன் சஞ்சலப்படுகிறீர்; நீர் இல்லறத்திற் புகவேணும், புகும்போதும் இராமச்சந்திர ஐயாவுக்கு இல்லாளாக அமையவேண்டும் என்பது நீர் கும்பிடப்போன கதிர்காமத்தையனுடைய திருவுளச் சம்மதமென்பதை மறந்துவிடலொண்ணாது: கதிர்காமத்திற்குப் போகும் மார்க்கத்திலே, வெருகல் கங்கையில் மூழ்கும்போது, நீர்மாத்திரம் மூழ்கினீரல்லீர்; உம்மோடு யாத்திரைவந்த அத்தனை பேரும் ஸ்நானஞ் செய்தார்கள்; அவர்களுளொருவரை அந்த ஆற்று வெள்ளம் அள்ளிச் செல்லாது உம்மையே அள்ளிச் சென்றது; உம்மை ஆறு அள்ளிக்கொண்டோடும்போது அங்கு நின்றவர்களெல்லாரும் உமதுயிரைப் பாதுகாக்க நினைத்துப் பதைபதைத்து வெள்ளத்தில் நீந்தி உம்மை மீட்க முயன்றார்கள்; ஆனால் அவர்களால் முடியாதாக இராமச்சந்திரஐயா மாத்திரமே உம்முடைய உயிரைக் காத்தாரென்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்: அந்த நேரத்தில் நீங்கள் யாரென்பதையும் அவர் அறியார்; ஆனதால் அச்செயல் கதிர்காமத்தையனுடைய திருவருளால்நிகழ்ந்ததென்று நாம்சிந்தித்து, அக்கந்தக் கடவுளைப் பயபத்தியுடன் வணங்குவதேயொழிய, வேறு எதனையும் கனவிற்றானும் நினைக்கலாமா? அல்லாமலும், தங்காய், இரஞ்சிதம் உங்களிருவரையும் பார்த்துக் கதிர்காமத்திலுள்ள கற்பகனார் கந்தனும் வள்ளியும்போல வாழ்வீர்கள் என்று வாழ்த்தினாரமே; அதன் கருத்தென்ன? ஆனதால் இராமச்சந்திர ஐயா ஆபத்துவேளையிற் பாதுகாத்த உமது உயிரும், அந்த நேரத்தில் அவர் தீண்டிய உமது உடம்பும் அவருக்கே உரியன; தங்காய், மேலும் துறவறத்தைக்காட்டிலும் இல்லறமே நல்லறமென்பர் பெரியோர்; அறுபத்துமூன்று நாயன்மாருட் பெரும்பாலினோர் இல்லறத்தை இனிது நடத்தி மேலான கதியடையவில்லையா? இல்லறத்திலே துறவறமுண்டு, துறவறத்திலே இல்லறமுமுண்டு, அம்மா, நீர் அவரை விவாகஞ்செய்ய வேண்டுமென்பதே உமது வாழ்வை விரும்பிய எங்களுக்கெல்லாம் பெரும் விருப்பமாகும்; உம்முடைய உயிரை மீட்டவருக்கு நீர் பிரதி உபகாரஞ் செய்வதென்றால், அவருக்குச் சிறந்த வாழ்க்கைத் துணையாக அமைந்து இருமைக்குந் துணை புரிவதுதான்" என்று முகத்திற் குறுவேர்வையரும்ப, விழிகளில் நீர் துளிப்ப, அபிமானத்தோடு சொல்லி முடித்தாள்; விசாலாட்சியின் ஆர்வமான பேச்சை அவதானமாகக் கேட்டுக்கொண்டுநின்ற இருவருக்கும் அவள் பண்டிதையென்ற ஞாபகம் மீட்டும் வந்தது; இரஞ்சிதம் சிலநிமிஷம் யோசித்தவண்ணம் நின்று, பின்னர் விசாலாட்சியை அன்புடன் பார்த்து, "அக்கா, நீங்கள் கவலைப்படவேண்டாம்; நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன்" எனலும், விசாலாட்சியும் இங்கிதமும் பெருமகிழ்ச்சி யடைந்து தங்கள் ஆசனத்தில் ஒருங்கு இருந்து ஒருவரையொருவர் பாராட்டிப்பேசினர்

### மணநாளும் நிச்சயிக்கப்படலாயிற்று

பின்னர் விசாலாட்சி அவ்விருவரிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு தன் நாயகனிருக்குமிடத்தையடைந்து, விஷயம் முழுவதையும் தெரிவிக்க விசுவநாதனும் 'அதுதக்க'தென்றான். பின்பும் விசாலாட்சி அவ்விஷயத்தை இரஞ்சிதத்தின் மாமனாரிடம் சொல்லும்படி விசுவநாதனைக் கேட்க, அவன் அதற்கு உடன்பட்டுத் தலைவாசற் பக்கத்திலிருந்த இரஞ்சிதத்தின் மாமனாரிடந் தெரிவித்து, இரஞ்சிதத்தின் விவாகத்தைத் தரிசிக்கவென்று ஊரைவிட்டு நாங்கள் வந்து பலநாட்களாயின; ஆனதால், அதனை டம் நிறைவேற்றவைத்தால், நாங்கள் இருமங்கல கருமங்களையும் தரிசித்துக்கொண்டு விரைவில் ஊருக்கு மீண்டுபோதல் இயலும்" என்றான். அதனைக்கேட்ட ஐயரும் "நீர் சொல்வதுமுழுவதும் நியாயமாகும்; இரஞ்சிதம் விவாகஞ் செய்யும் விஷயத்தில் இன்னமும் பிணிநிற்கிறாளென்ற காரணத்தினாற்றான், நானும் பராமுகமாயிருந்துவிட்டேன்; உமது மனைவியார் இரஞ்சிதத்தை விவாக விஷயத்தில் தீர்க்கமாகச் சம்மதிக்கச் செய்தமை எனக்கு வெகு சந்தோஷம்; இராமச்சந்திரனுக்கும் இவ்விஷயத்தைத் தெரிவித்து, முதல் இவர்களுடைய விவாகத்தையே திருவருளை முன்னிட்டு நிறைவேற்றிவைப்போம். அடுத்துவருஞ் சுபநாளில் மற்றைய விவாகத்தையும் ஆண்டவனருளாற் பூர்த்தி செய்யலாம்" என்றார்; விசுவநாதனும் கேட்டுக்கொண்டு மகிழ்ச்சியுடன் வந்து தன் மனையாட்கு நிகழ்ந்தவற்றைச்சொல்ல அவளும் மனப்பூரித்தாள்; சற்றுநேரம் செல்ல இராமச்சந்திரன் அங்கே வந்தான்; அவனுடைய அபிமானப்பிதா அவனுக்கு விஷயத்தை விபரமாகச் சொல்லி, அவனுக்கும் இரஞ்சிதத்திற்கும் முந்தி விவாகம் நிறைவேற வேண்டுமென்றதற்குச் சில ஏதுக்களையும் எடுத்துக் காட்டினார். கேட்ட இராமச்சந்திரன் "உங்கள் வாக்குக்கு எதிர்வாக்குண்டோ" என்று சொல்லி அப்படியே விவாகஞ் செய்தற்கு உடன்பட்டான்; இந்தப் புதிய ஒழுங்கு சூரியநாராயண சாஸ்திரியாருக்கும், அவர்மூலமாக அவருடைய இனசனத்தார்க்கும் தெரிவிக்கப்பட்டது; சூரியநாராயணசாஸ்திரியாரும் சுற்றத்தவரும் அந்த மங்கல செய்தியை யறிந்த மாத்திரத்தே பெருமகிழ்ச்சி கொண்டாராய், தாங்களும் விவாகப்போதிற் சமுகஞ் செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார்கள் இராமச்சந்திரன் இரஞ்சிதமென்னுமிருவரின் விவாகம் நிறைவேறிய பின், சிலநாள் கழித்து, அந்த மணப்பந்தரிலேயே சூரியநாராயண சாஸ்திரியார் இங்கிதமென்னுமிவர்களின் விவாகத்தையும் நிறைவேற்றுவதென நிச்சயஞ் செய்ததோடு, இராமச்சந்திரன் இரஞ்சிதமிருவருக்கும் மணநாளும் நிச்சயிக்கப்படலாயிற்று. விவாகத்திற்காகிய ஆயத்தங்களும் முயற்சிகளும் துரிதமாய் நடக்கலாயின.

(வரும்)

## அரசியலில் ஐக்கிய உத்தியோகத்தர்

### ஈடுபடுவதாகக் குற்றச் சாட்டு

ஐக்கிய இயக்கம் புனிதமானது. அதனை அரசியற்பூசல்களில் ஈடுபடுத்தாமல் இருக்க வேண்டியது அவசியம் ஆனால் இந்த இயக்கத்தைப் பரப்பவேண்டிய உத்தியோகத்தராயுள்ளவர்களே, அரசியற் பூசல்களில் இந்த இயக்கத்தை அகப்படுத்த எத்தனிக்கின்றனர் என்று சென்ற திங்கட்கிழமையன்று ஊர்காவற்றுறையில்நிகழ்ந்த தீவுப்பகுதி ஐக்கிய மகாசபையின் இரண்டாவது வருடாந்தக்கூட்டத்தில் தலைமை வகித்த வழக்கறிஞர் திரு N. T. சிவஞானம் அவர்கள் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

"ஐக்கியசங்கப் பகுதியில் அதிகாரிகளாயுள்ளார், தம் கீழ்க் கடமை பார்க்கும் உத்தியோகத்தர், அவர்கள் எவ்வளவு திறமையுடன் கடமையாற்றுபவர்களானாலும் கேவலம், தங்களுடைய எண்ணப்படி அரசியல் விஷயங்களில வேலை செய்யப் பின்னின்றால், அவர்களைப் பதவியினின்றும் நீக்க அல்லது மாற்ற முயற்சிக்கின்றார்கள். அதிகார வர்க்கத்தினர் இப்படிச் சர்வாதிகார முறைகளை இந்த இயக்க விஷயத்திற் புகுத்துவது, இதற்குப் பெரும் ஆபத்தாக முடியும்.

'அநேக பரிசோதகர், தமது சங்கக் கணக்குப் பரிசோதனைவேலைகளைச் செய்யாது, அரசியற்கட்சிப் பிரசாரத்தில் ஈடுபடுகிறார்கள். இதனால் சங்கங்கள் மிகவும் கேவல நிலைமையை அடைகின்றன.

"இன்னும் ஐக்கியசங்கக் கூட்டங்களை அரசியற் சம்பந்தமான கூட்டங்களாக்கவும் சில உத்தியோகத்தர் முயற்சிக்கின்றனர்.

"ஐக்கிய இயக்கம் நன்கு வளரவேண்டுமாயின் இனியாவது அது அரசியற் பூசல்களில் அகப்படாதிருக்குமாக."

---

ஐரோப்பாவிலிருந்து ஒழுங்காக உருளைக் கிழங்குகள் காலந் தோறும் வருகிறபடியினால், அவற்றிற்குப் பஞ்சம் ஏற்படக் காரணமில்லையென்று உணவுப்பகுதிஅதிகாரியாகிய ஸ்ரீ ஆள்வாப்பிள்ளை அவர்கள்தெரிவிக்கின்றார்.

## மீண்டும் ஜப்பான் துணி?

### பெறுவதற்கு அதிகாரிகள் முயற்சி

இப்போது நடந்து முடிந்த மகா யுத்தத்துக்கு முந்தி, இலங்கைக்கு வேண்டிய துணிகளிற் பெரும்பான்மையானவை, ஜப்பானிலிருந்தே இறக்குமதியாயின. யுத்தம் ஆரம்பமானபின், ஜப்பானியத் துணிகள் கிடைக்காமற் போனதுதான் இங்குள்ள துணிப் பஞ்சத்துக்குக் காரணமாகும்.

இப்போது மீண்டும் ஜப்பானியத் துணிகளை இங்கே இறக்குமதிசெய்ய அதிகாரிகள் ஆலோசிக்கிறார்கள். ஜப்பான் இன்று அமெரிக்கரின் ஆதிக்கத்திலேயே பெரும்பாலும் இருக்கிறது. அமெரிக்க அதிகாரிகளின் முயற்சியினாலேயே, மீண்டும் அங்கு நெசவுத் தொழிற்சாலைகள் வேலைசெய்ய ஆரம்பித்திருக்கின்றன. எனவே அங்கிருந்து துணிகள் பெற வேண்டுமாயின், அமெரிக்க அதிகாரிகளின் தயவு வேண்டியிருக்கிறது.

அமெரிக்க அதிகாரிகளின் உதவியைப்பெற்று, இலங்கைக்கும் ஓர் தொகை ஜப்பானியத் துணிகளை அனுப்பவேண்டும் என்று இலங்கையரசாங்கம் குடியேற்றநாட்டு மந்திரிக்கு ஓர் விண்ணப்பம் அனுப்பியிருக்கிறது.

## 6830 தொன் அரிசி

வருகிற ஞாயிற்றுக்கிழமை பர்மாவிலிருந்து 6830 தொன் அரிசி கொழும்புத் துறைமுகத்தில் இறக்குமதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. டிசெம்பர் மாசம் முற்பகுதியில் 8000 தொன் மாவும் வருமென அதிகாரிகள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்,

## பதுளை சைவபரிபாலன சங்கம்

### சமயபாடப் பேச்சுப் போட்டி

இப்பேச்சுப் போட்டி 17-11.46மாலை 5- 0 மணி தொடக்கம் உதவி மாகாணாதிபதி ஸ்ரீமான் என். மாணிக்க இடைக்காடர் தலைமையில் தருமநாதக் கல்லூரி மண்டபத்தில் நிகழ்ந்தது. சங்கத்தலைவர் ஸ்ரீமான் எஸ் தக்ஷிணாமூர்த்தியால் வரவேற்புரை கூறப்பட்டதும், அக்கிராசனரால் முன்னுரை கூறப்பட்டது. போட்டி ஆரம்பமாகுமுன், செயலாளர் ஸ்ரீமான் எஸ் ஆறுமுகராசா தனது ஆரம்பவுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். "இந்து சமயக் கொள்கைகளும், தமிழின் பெருமையும் அபாரசிறப்புக்கள் வாய்ந்தவை. இந்துக்கள் என்றும் தமிழர் என்றும் சொல்லிக்கொள்வதில் நாம் பெருமையடையத்தான் வேண்டும், அதனால்ஏனைய சமயங்களைப்பற்றி அறிதலோ ஏனைய பாஷைகளைப் பற்றிப் படித்தலோ கூடாதென்பது கருத்தன்று. எங்கள் சமயத்தில்பெயரும் தமிழின் பெயரும் மறைந்தோனாலும் காரியமில்லை. உலகத்திற்குப் பொதுவான சமயமும்பாஷையும் ஏற்பட நாம் அரும்பாடு படுதல் வேண்டும். சமயஸ்தபனங்கள் இவ்வித நோக்குடனேயே நடத்தப்படவேண்டும் இத் தனிப்பெரு நோக்குடனேயே இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டது"

சமயபேதமின்றி மாணவர்கள் ஆண்களும் பெண்களுமாக 14 பேர் போட்டியிற் பங்குபற்றினர். ஸ்ரீமதி என். மகாதேவா பி. ஏ., ஸ்ரீமான்கள் சி. கார்த்திகேசன் பீ. ஏ, எஸ். விசுவலிங்கம் பீ. ஏ. ஆகிய மூவரும் நடுநிலையாளராக இருந்தனர்.

ஸ்ரீமதிமகாதேவா வெற்றிபெற்றோரை அறிவிக்கும்போது, இவ்விதமான சிறந்த போட்டியைத் தான் இதுவரை கண்டதில்லை என்றும், முஸ்லீம் மாணவர்களும் போட்டியிற் பங்குபற்றியமை பாராட்டப்படத்தக்கதென்றும் கூறினார். ஸ்ரீமதி மாணிக்க இடைக்காடரால் பரிசுகள்வழங்கப்பட்டன,

—கடிதர்


வெளிவந்து விட்டது!

படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் B. A. எழுதியது

பயிற்றப்படும் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்கும், ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும் பாடமாக விதிக்கப்பட்டுள்ளது

இதன் இரண்டாம்பதிப்பு மேற்படி நூல்ஆசிரியர் அவர்கள் செய்த பல திருத்தங்களோடு (யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் வெளியீடாக) அச்சிடப்பட்டிருக்கின்றது.

விலை ரூபா 3

(மானேஜர், சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேவை

வட்டுக்கோட்டைகிழக்கு ஐக்கியபண்டசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. மாசவேதனம் ரூபா 50. பிணை 300 ரூபா பணமாகக் கட்டல் வேண்டும். விருப்பமானவர்கள் இந்த நவம்பர்மாசம் 30-ந் தேதிக்குப் பிந்தாமல் எமக்கு விண்ணப்பம் பண்ணல் வேண்டும்.

A. கந்தையா,
கௌரவ காரியதரிசி,
வட்டுக்கோட்டை கிழக்கு
ஐக்கிய பண்டசாலை,
வட்டுக்கோட்டை.

19-11-46
Mis 236 22

## தேவை

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாசாலைக்கு ஓர் ஆங்கில ஆசிரியர் தேவை. விண்ணப்பப் பத்திரங்கள் டிசெம்பர் 10ந் திகதிக்கு முன் சேர வேண்டியது

ஆ. வே. சிற்றம்பலம்,
காரியஸ்தர்.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை, 15-11-46.

Mis 238 22

## காரைநகர் கருங்காலிச் சுப்பிரமணியர் ஆலயம்

காரைநகர்ச் சைவ மகாசபையார் 'ஆலயவழிபாடு' என்னும் விஷயமாகக் கொண்டுள்ள கருத்துக்களைத் தழுவி நடக்துள்ள பல உபந்நியாசங்களின் அம்சங்களைத் தனித்தனி எடுத்து ஆங்காங்கு பல அரிய உபந்நியாசங்கள் நிகழ்த்தப்பெற்று வருகின்றன. சென்றவாரம் ஆலய வழிபாடு செய்யும் அன்பர்களின் பக்தியை வளர்க்கும் பொருட்டு "தேவாரச் சிறப்பு" என்னும் விஷயத்தில் தேவாரம் ஸ்ரீமத் க. செல்லையாக் குருக்கள் அவர்களாலும், ஆலய நிருவாகம் செவ்வனே நடைபெறும் பொருட்டு "ஆலய நிருவாகம்" என்னும் பொருள்பற்றி ஷெ கோயில் அத்தியட்சகர் அவர்களாலும் பிரசங்கிக்கப்பட்டன.

## ஜீவாதார வைத்திய விளம்பரம்

மானிடர்க்குப் பெருஞ் செல்வமாகக் கிடைத்த சஞ்சீவி வைத்தியம்

ஒருமனதுடன் வந்து நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம் இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்தி வரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11-46)

## நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

●

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினால், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### சனி நவம் 23

காலை: 7-15 கிராம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி தக்ஷிணாமூர்த்தி வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி எஸ் சிவபாக்கியம் பாட்டு 8-30 திரைகானம் 9 முடிவு.

1 டி தக்ஷிணாமூர்த்தி வயலின் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில்செய்திகள் 2-05 சர்வகலாசாலைகளுக்கு 2-15 காஞ்சீவரம் டி பச்சையப்பா பாட்டு 2 45 முடிவு.

மாலை: 5 காஞ்சீவரம் டி பச்சையப்பா பாட்டு 5-40 திருமந்திர விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 பி எஸ் சிவபாக்கியம் பாட்டு 7.15 சகலரின் மகப் 7.30 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி (டி அர் மகாலிங்கம் புல்லாங்குழல்) 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 நகில நிழ்ச்சி 9 30 லண்டனிலிருந் செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10-30 முடிவு.

### ஞாயிறு நவ 24

காலை 71-5 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி எல் சுப்புலட்சுமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருவெண்காடு சுப்ரமணியபிள்ளை நாகஸ்வரம் இசைக்கட்டு 8-30 வி பி ஞானசுந்தரம் பாட்டு 9 முடிவு.

12 சதர்ம்ப 12-30 தன்னிலான உதவி நாடகம் 12.45 பூக்கடைகளுக்கு விளம்பரம் 1 மணி மலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2-05 மின்னிசை 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 டி பி சிவசங்கரம்பிள்ளை புல்லாங்குழல் 5-40 தேவாரகானம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 பி எல் சுப்புலட்சுமி பாட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 தீண்டாமை: ஆலயப்பிரவேசப் பேச்சு 8 வி பி ஞானசுந்தரம் பாட்டு 8.30 டி பி சிவசங்கரம்பிள்ளை புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ரேடியோ நாடக இசை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஸ்ரீ வைகுண்டம் எஸ் பரமசிவம் பிள்ளை பாட்டு 10.30 முடிவு.

### திங்கள் நவ 25

காலை 7.15 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 ஆர் சிவசுப்பிரமணியா நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 புதிய பாடல்கள் 8.30 பி எல் லட்சுமி பாட்டு 9 முடிவு.

1 கதர்ம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி எல் லட்சுமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பி எல் லட்சுமி பாட்டு 2-15 கல்விஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 ஆர் சிவசுப்பிரமணியம் நாகஸ்வரம் 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 எம கே தியாகராஜ பாகவதர் இசைக்கட்டு 7.15 இலக்கியவாசகம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 சேசமங்கலம் சுப்ரமணிய ஐயர் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 திருப்புகழ் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9 45 இசைவேளை 10-30 முடிவு.

### செவ்வாய் நவ 26

காலை 7-15 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 திருச்சேறை ஆர் கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 குரல்இசை 8-30 எஸ் சுந்தரேச முதலியார் புல்லாங்குழல் 9 முடிவு.

1 சுரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் சுந்தரேச முதலியார் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் சுந்தரேசமுதலியார் புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 காஞ்சீபுரம் ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஒரு சுரலிசை இசைத்தட்டு 7.30 தமிழில் செய்திகள் 7.45 தனக்கணக்கு பேச்சு 8 திருச்சேறை ஆர் கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை பாட்டு 8-30 காஞ்சீபுரம் ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 [illegible] கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.


# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 400, 000, 00 |

தலைமைக்காரியாலயம் - பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை.

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு. லண்டன் ஏஜெண்டுகள் பார்க்கிளேஸ் வங்கி.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

E. C. G. விக்கிரமசிங்க,
ஏஜெண்டு,

(Mis 137 2-8—31-7-47)



## தந்தரோகசஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்

## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 211 1-11-46—30-4-47 (வெ)



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:
க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis.25 23-4-46 to 22-3 47)



## விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.


Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, November, 22, 1946.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org